முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 649**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

09.07.2021, வெள்ளிக்கிழமை

1. கலியுகத்தின் காப்பே அரங்கா வாழ்க
   கருணைகொண்ட தவசியே தேசிகா வாழ்க
   அழியாமை பெற்றுவந்த ஆறுமுகன் சூட்சுமமே
   அகிலத்தை காக்கவந்த மாதவயோகியே
2. யோகியே அரங்கனே உந்தனுக்கு
   அருளுவேன் சுப்ரமணியர் யானும்இனிதே
   அகிலமதில் ஞான அறிவுரைஆசி
   அருளுவேன் பிலவமிதுனதிங்கள் தன்னில்
3. தன்னிலே அரங்கனின் சக்திகூடி வர
   தவமார்க்கம் கொண்டுள்ள மக்களெல்லாம்
   அவனியில் அரங்கனால் காப்பாற்றப்படுவர்
   அழியாமை பெற்று அரங்கனால் தேற்றம்பெறுவர்
4. தேற்றத்திற்கு சிறந்த ஞானியாக
   திருவருள்பட எந்தன் சக்தியாக இருக்கும்
   ஆற்றல்மிக்க அரங்கன் அறமும் தீட்சையும்
   அகிலத்தார்க்கு அறவேலியாக அமையும்
5. அமையவே அரங்கன் தர்மத்தை அளவில்லா செய்துகொண்டு வருகின்ற மக்கள்படை மூலமே
   அகிலம் பெருமாற்றம் காணும்
   அச்சுறுத்தும் நச்சுக்கிருமி இடரையும் வென்று
   அச்சமில்லா ஞானவாழ்வும் பெற்று அகிலமே ஞானயுகமாற்றம் பெறும்
6. யுகமாற்றம் செய்யவந்த மாதவசி அரங்கனை
   உலகோர் ஏற்று வணங்கிவர
   வகையான இயற்கை வளங்களோடு வையகம்
   குறையில்லாத மேல்நிலை பெற்றுசிறக்கும்
7. சிறக்கவே வானவர்களும் வியந்து அரங்கனை
   சிறந்த வழிகாட்டி சேவையில் உயர
   மறுக்காது வரங்கள் தொடர்ந்து வழங்கிவர
   மாதவசியை பணிந்த மக்கள் மூலம்
8. மூலமாக இந்த கலியுகம்
   முழுமைபட ஞானயுகமாக மாற்றம் பெறும்
   காலனை வென்ற அரங்கன் கரம்பட்ட மக்களெல்லாம்
   கலியுகத்தில் மரணமில்லா பெருவாழ்வு பெற்று சிறக்க நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–